**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.96/2025
Prosecution witness.01

பெயர் : சண்முகம் | தொழில் :

தந்தை/கணவர் பெயர் : ஆண்டி | கிராமம் :

வயது : | தாலுகா :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

14.05.2026

(1, 2 மற்றும் 4ம் எதிரிகள் ஆஜர், 3ம் எதிரி வழக்கிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு CC No.374/2025 ஆக நிலுவையில் இருந்து வருகிறது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் கருமல் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது வீட்டின் அருகே தான் குடியிருந்து வருகிறார்கள். எங்கள் குடும்பத்தாருக்கும், ஆஜர் எதிரிகளின் குடும்பத்தாருக்கும் இடையே ஏற்கெனவே இடப்பிரச்சனை இருந்து வந்தது. இந்நிலையில் போன வருடம் ஒரு மாதம் 05ம் தேதி வாக்கில் காலை 09.00 மணியளவில் எனது வீட்டின் அருகே உள்ள ஆட்டுகொட்டகையை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது ஆஜர் 4ம் எதிரி வந்து இங்கு ஏன் வந்து சுத்தம் செய்கிறாய் என்று கேட்டார். நான் 4ம் எதிரியிடம் இது எனக்கு சொந்தமான இடம் தான் வேண்டுமென்றால் இடத்தை அளந்துகொள்ள வேண்டியது தானே என்று தெரிவித்தபோது அங்கு வந்த 1ம் எதிரி அவரது வீட்டிலிருந்து எடுத்து வந்த கம்பியை வைத்து எனது பின்னந்தலையில் அடித்துவிட்டார். அதில் எனக்கு இரத்தம் வர ஆரம்பித்து நான் அந்த இடத்திலேயே மயக்கம் அடைந்துவிட்டேன்.

2) சிறிதுநேரம் கழித்து எனக்கு மயக்கம் தெளிந்ததால் அங்கிருந்து எழுந்து எனது வீட்டின் அருகே வந்துவிட்டேன். அப்போது 2 மற்றும் 3ம் எதிரிகள் எனது வீட்டின் அருகே வந்து என்னை பார்த்து என்னடா உனக்கு இடம் உள்ளது இங்கேயே திரிந்துகொண்டிருக்கிறாய் என்று சொல்லி அவர்கள் இருவரும் கையால் வலது மற்றும் இடது தோள்பட்டையில் மாறி மாறி அடித்தார்கள். அவர்கள் அடிப்பதை பார்த்து எனது மகள் முருகேஸ்வரியும், எனது மருமகள் அனிதாவும் ஓடிவந்து சண்டையை விலக்கினார்கள். பின்னர் என்னை மேற்படி இருவரும் 108 ஆம்புலன்சில் ஏற்றி முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தார்கள். முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் எனக்கு பின்னந்தலையில் 3 தையல் போட்டு மேல்சிகிச்சைக்காக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பரமக்குடி அரசு மருத்துவமனையில் ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிக்சையில் இருந்தேன்.

3) நான் பரமக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தேரிருவேலி காவல்நிலைய போலிசார் வந்து என்னை விசாரித்தார்கள். நான் நடந்ததை கூறினேன். அவர்கள் அதை ஒரு தாளில் எழுதிக்கொண்டு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். எனக்கு கையொப்பம் செய்த தெரியாது என்பதால் நான் கைரேகை செய்து கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கைரேகை என்னுடையது தான். புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை அடித்தவர்களில் 3ம் எதிரி மட்டும் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. மற்ற எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) மூன்று வருடங்களாக எனக்கும், எதிரிகளுக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வருகிறது. சம்பவத்திற்கு முன்னதாக இடத்தை மூன்று முறை அளந்தோம். ஆனால் எதிரிகள் அளவு கல்லை பிடிங்கிபோட்டுவிட்டார்கள். எதிரிகள் அளவுக்கல்லை பிடிங்கியது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளித்தோமா என்றால் புகார் அளித்தோம். போலிசார் வந்து இருதரப்பையும் அழைத்து விசாரித்துவிட்டு சமாதானமாக செல்லுமாறு கூறிச்சென்றுவிட்டார்கள். எதிரிகளின் இடத்தில் அவர்கள் வீடுகட்டியுள்ளார்கள். கட்டிடம் கட்டக்கூடிய ஒரு கம்பியால்

அன்றைய தினம் 1ம் எதிரி என்னை அடித்தார். இளையராஜாவும், ரவிசந்திரனும் எனது வீட்டில் வாசலில் வைத்து என்னை அடித்தபோது மருமகள் அனிதாகவும், மகள் முருகேஷ்வரியும் இருந்தார்கள்.

2) 108 ஆம்புலன்ஸ்யை யார் அழைத்தார்கள் என்று எனக்கு தெரியாது. எனது வீட்டிலிருந்து காவல்நிலையத்திற்கு செல்லவில்லை ஏனென்றால் எனக்கு மயக்கமாக இருந்ததால் மருத்துவமனைக்கு சென்றோம். போலிசார் என்னை பரமக்குடி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். நான் கூறிய படி சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எனக்கு வயதாகிவிட்டதால் நான் கீழே விழுந்து காயம் ஏற்படுத்திக்கொண்டு ஏற்கெனவே எனக்கும், எதிரிகளின் குடும்பத்தாருக்கும் இடையே இருந்த முன்பகையை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகளை பழிவாங்கும் நோக்கில் பொய்யாக எதிரிகள் மீது புகார் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றாலும், அதனால் தான் எனது உறவினர்கள் மட்டும் சம்பவத்தை பார்த்ததாக நான் புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றாலும், எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.96/2025
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : முருகேஸ்வரி | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : நெப்போலியன் | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

14.05.2026

(1, 2 மற்றும் 4ம் எதிரிகள் ஆஜர், 3ம் எதிரி வழக்கிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு CC No.374/2025 ஆக நிலுவையில் இருந்து வருகிறது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் கருமல் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 சண்முகம் எனது தகப்பனார் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எனது அப்பாவின் வீட்டிற்கு பின்புறம் உள்ள இடம் குறித்து எனது அப்பாவிற்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே ஏற்கெனவே முன்விரோதம் இருந்து வருகிறது. கடந்த 09.05.2025ம் தேதி எனது தகப்பனார் வீட்டின் பின்னே உள்ள இடத்தை அரசு அலுவர்களை வரவழைத்து அளந்து வீட்டிற்கு பின்புறம் இடத்தை குறிக்கும் வண்ணம் கற்களை ஊன்றி வைத்திருந்ததை ஆஜர் எதிரிகள் சேர்ந்து அகற்றிவிட்டார்கள். பின்னர், அதற்கு மறுநாள் காலை 09.00 மணியளவில் எனது தகப்பனார் அவரது வீட்டிற்கு பின்புறம் உள்ள ஆட்டுக்கொட்டகையை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது ஆஜர் 4ம் எதிரி அங்கு வந்து இதுவரை என் இடம் உள்ளது, இங்கு வந்து எப்படி கற்களை ஊன்றலாம் என்று கூறி சண்டையிட ஆரம்பித்தார். அப்போது நான் வீட்டிற்குள் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். 4ம் எதிரியின்

சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது எனது தகப்பனார் 4ம் எதிரியிடம் எங்களுக்கு சொந்தமான இடத்தில் தான் கல் ஊன்றி வைத்திருக்கிறோம் என்று வாக்குவாதம் செய்து கொண்டிருந்தார். நான் சென்று எனது அப்பாவை 4ம் எதிரியிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம் என்று கூறினேன். அப்போது 1ம் எதிரி அங்கு வந்து கீழே கிடந்த கம்பியை எடுத்து எனது தகப்பனாரின் பின்னந்தலையில் அடித்ததில் எனது தகப்பனாருக்கு பின்னந்தலையிலிருந்து இரத்தப்போக்கு ஏற்பட்டது.

2) பிறகு எதிரிகள் ரவிச்சந்திரன் மற்றும் இளையராஜா ஆகியோரும் அங்கு வந்து எங்கள் இடத்தில் எப்படி கல்லை ஊன்றலாம் என்று கேட்டு கத்திக்கொண்டிருந்தார்கள். எனது அப்பாவிற்கு இரத்தம் அதிகமாக வந்ததால் நானும், எனது தம்பி மனைவி அனிதாவும் எனது தகப்பனாரை 108 ஆம்புலன்ஸ் மூலம் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பரமக்குடி அரசு மருத்துவமனையில் எனது அப்பா ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிக்சையில் இருந்தார். அப்போது போலிசார் வந்து விசாரித்தனர். எனது அப்பா நடந்த சம்பவத்தை கூறி புகார் வாக்குமூலத்தை அளித்தார். போலிசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

CC.No.96/2025
Prosecution witness.03

| | |
|---|---|
| பெயர் : அனிதா | தொழில் : |
| தந்தை/கணவர் பெயர் : முனியசாமி | கிராமம் : |
| வயது : | தாலுகா : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths act, 1969 (Central Act 44 of 1969)

14.05.2026

(1, 2 மற்றும் 4ம் எதிரிகள் ஆஜர், 3ம் எதிரி வழக்கிலிருந்து தனியாக பிரிக்கப்பட்டு CC No.374/2025 ஆக நிலுவையில் இருந்து வருகிறது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**முதல் விசாரணை**

1) நான் கருமல் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 சண்முகம் எனது மாமனார் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் ஊர்க்காரர்கள் ஆவார்கள். எனது மாமனாரின் குடும்பத்தாருக்கும், ஆஜர் எதிரிகளுக்கும் இடையே எனது மாமனாரின் வீட்டிற்கு பின்புறம் உள்ள இடம் குறித்து ஏற்கெனவே முன்விரோதம் இருந்து வருகிறது. 09.05.2025ம் தேதி காலை 10.30 மணியளவில் எனது மாமனாரின் வீட்டின் பின்னே உள்ள இடத்தை அரசு அலுவர்களை வரவழைத்து அளந்து வீட்டிற்கு பின்புறம் இடத்தை குறிக்கும் வண்ணம் கற்களை ஊன்றி வைத்திருந்ததை ஆஜர் எதிரிகள் சேர்ந்து அகற்றிவிட்டார்கள். பின்னர், அதற்கு மறுநாள் 10.05.2025ம் தேதி காலை 09.00 மணியளவில் எனது மாமனார் அவரது வீட்டிற்கு பின்புறம் உள்ள ஆட்டுக்கொட்டகையை சுத்தம் செய்து கொண்டிருந்தபோது ஆஜர் 4ம் எதிரி அங்கு வந்து முண்டை நீ விலங்காம போயிருவன்னு திட்டினார். நான் வீட்டிற்குள்

இருந்ததால் அந்த சத்தம்கேட்டு வெளியே வந்து பார்த்தபோது 4ம் எதிரி எனது மாமனாரிடம் இதுவரை என் இடம் உள்ளது, இங்கு வந்து எப்படி கற்களை ஊன்றலாம் என்று கூறி சண்டையிட ஆரம்பித்தார். அப்போது நான் 4ம் எதிரியிடம் ஏன் இவ்வாறு பேசுகிறீர்கள் என்று கேட்டதற்கு 4ம் எதிரி என்னை பார்த்து நீயும் உன் குழந்தைகளை பலிகொடுத்துவிடுவாய் என்று பேசினார்.

2) அவர் அவ்வாறு பேசிக்கொண்டிருக்கும்போதே 1ம் எதிரி சாத்தையா அங்கு வந்து கீழே கிடந்த கம்பியை எடுத்து எனது மாமனாரின் பின்னந்தலையில் அடித்ததில் எனது மாமனாருக்கு பின்னந்தலையில் காயம் ஏற்பட்டது. இதற்கிடையில் அசா.2ம் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். எனது மாமனாருக்கு இரத்தப்போக்கு அதிகமாக இருந்ததால் நான் 108 ஆம்புலன்சிற்கு போன்செய்து வரவழைத்தேன். ஆம்புலன்ஸ் வந்ததும் எனது மாமனாரை ஆம்புலன்சில் ஏற்றிக்கொண்டிருந்தபோது எதிரிகள் ரவிச்சந்திரன், சாத்தையா மற்றும் அம்சா ஆகியோர் வந்து நீ எதுக்கு வந்தாய் என்று கேட்டு என்னிடம் சண்டையிட்டார்கள். நான் எனது மாமனாருடன் 108 ஆம்புலன்ஸ் மூலம் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். அங்கு எனது மாமனாருக்கு முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளித்துவிட்டு மேல்சிகிச்சைக்காக பரமக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பரமக்குடி அரசு மருத்துவமனையில் எனது மாமனார் ஒரு வாரம் உள்நோயாளியாக சிகிக்சையில் இருந்தார். அப்போது போலிசார் வந்து விசாரித்தனர். எனது மாமனார் நடந்த சம்பவத்தை கூறி புகார் வாக்குமூலத்தை அளித்தார். போலிசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை